Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

தாயெனத் தாங்கிக் கொள்ளே

தவத்திரு. முனைவர்
அ. வே. சாந்திகுமார சுவாமிகள்

SRI SAI NILAYAM
Madurai

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation



Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

தாயெனத் தாங்கிக் கொள்ளே

தவத்திரு. முனைவர்

அ. வே. சாந்திகுமார சுவாமிகள்

SRI SAI NILAYAM

Madurai

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

17
டிசம்பர்
2021

முன்நிற்கும்
மோனை நீ
பின்தொடரும்
எதுகை நான்

திருவடிகளுக்கு...

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

மூல முதலே!
முயற்சிக்கு வித்தாகி
ஞால முழுதாளும்
நாயகனே! – சாலநின்
பொன்னடியைப் போற்றி
புகழ்செய்து வேண்டினேன்
நன்தமிழ் ஈவாய்
நயந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

சிந்தும் கவிச்சொல்லில்
சீராய் இசைத்திடும்
சந்தம் செழித்துவரும்
செந்தமிழே! – நெஞ்சத்தைப்
பற்றுகின்ற பாட்டொன்று
பக்தியிலே நான்படிக்க
வற்றாத சொல்லெடுத்து
வா!

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

பொன்மலை சபரி வாழும்
பந்தளத் தவப் பிறப்பே
தன்மனம் விரித்துக் காக்கும்
தாயினும் சிறந்த தாயே
உன்மனம் உருகி நிற்கும்
இன்னொலிச் சரணம் கேட்டே
இன்முக முறுவல் காட்டி
இன்னருள் புரிவாய் அப்பா

கற்பகப் பொன்வி ளக்கே
காசினி துலங்க வேண்டி
நற்பசு நெய்கு ளித்து
நண்ணிடும் துயர்க ளைந்து
நற்கதி வேண்டும் நெஞ்சம்
நாடிடும் அருள்கொ டுக்கும்
அற்புதக் கோலந் தன்னிற்
ஆட்கொளும் சக்தி நீயே

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

நின்னருள் நாமம் என்றும்
நினைப்பவர் நாவில் தங்கும்
நின்னருட் பதியை நோக்கி
நினைப்பவர் கைகள் கூப்பும்
நின்திரு மேனி காண
நினைப்பவர் நெஞ்சி னிக்கும்
நின்னருட் படிகள் ஏற
நினைத்திடும் நன்மை நாடும்

ஒருமுறை உருகும் நெஞ்சம்
உறவெனச் சொல்லி நிற்கும்
ஒருமுறை காணும் கண்கள்
உவப்புடன் கண்ணீர் சிந்தும்
மறுமுறை காணத் தூண்டி
மனதினில் இமைகள் மோதும்
வரும்முறை ஒவ்வொன் றாக
வழங்கிடும் அருளில் கூடும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

இருவிழி நீர்வ டித்தே
ஏங்கியே வாடும் நெஞ்சில்
அருளொடு பொருள ளிக்கும்
ஐயனே உன்னைக் காண
கருவினை ஏந்தி இன்பக்
கனவுகள் காணும் தாயாய்
இருமுடி சுமந்து நான்உன்
இருப்பிடம் தேடி வந்தேன்

தண்ணிறை சபரி வந்தே
தண்ணெழில் மகர நாளில்
கண்ணிறை காட்சி யொன்று
கருத்திடைக் கலந்தாற் போல
விண்ணிறை சோதி யாகி
வியப்பிடை ஆழ்த்திக் காட்டி
மண்ணிறை உயிர்க ளெல்லாம்
வணங்கிடும் மகிமை யானாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

உயிரொடு பசிவ ருத்தும்
விதியெனைக் கடிந்து வாட்ட
தயிரொடு மத்தைப் போல
தவித்திடும் நிலைமை யாகி
உயிரொடு உருகிக் கெஞ்சி
உள்ளகம் அழுது தேம்பி
மெய்யொடு துயர டையும்
மண்படு பிறவி ஏனோ

சிற்சுகம் தேடி யோடி
சிதைந்திடும் மனதின் எண்ணம்
விற்படு பொருளின் மீது
வினையொடு வைத்த பாவம்
அற்பமாய் உதறித் தள்ளி
அற்பனின் பிழைபொ றுத்து
நற்கதி யருள்வாய் ஐயா
நின்னடி சரண டைந்தேன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

புண்மனம் புலம்பி நாளும்
பொய்யினிற் கிடந்து வாடும்
என்மனத் தவிப்ப டக்க
ஏதென அறிந்தே னில்லை
வன்மனச் செயல்க ளெல்லாம்
வல்லிருட் புதைந்து போகப்
பொன்மனச் சபரித் தேவே
புண்ணிய நெறிகொ டுப்பாய்

வழுவிடும் ஆசை வீழ்ந்து
வரும்வினை தீர்க்க வேண்டி
அழுதிடும் வேளை உன்தன்
அரிஹர நாமம் சொல்லி
தொழுதிடும் கைகள் கூப்பத்
துணையென வந்து நீயும்
தழுவிடும் மார்ப ணைத்துத்
தாயெனத் தாங்கிக் கொள்ளே

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

கந்தா! கடம்பா!
கனிந்துருகி வேண்டுமென்
சிந்தை மகிழும்செந்
திற்குமரா! – சொந்தமென
வந்தஎன்னை நேசமுடன்
வாழவைத்த சண்முகா!
வந்தனை செய்வேன்
மகிழ்ந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

நெஞ்சம் புலம்பிட
நின்னருள் விம்மிட
தஞ்சமென உன்னைச்
சரணடைந்தேன் – கெஞ்சும்
மொழிகேட்டு வாடும்
முகம்பார்த்துக் கன்னம்
வழிந்தோடும் கண்ணீரை
மாற்று

என்னநான் வேண்டிட
என்னதான் கேட்டிட
இன்னது வேண்டுமென்ற
எண்ணமில்லேன் – ஒன்றுவேண்டும்
உன்னடியைப் பற்றி
உருகும் வரமருளி
என்எண்ண மாவாய்
இனிது

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

முருகா எனவோத
முன்வினைகள் தீர்ந்தே
உருகாத நெஞ்சம்
உருகும் – சருகாய்
உதிர்ந்து கவலைகள்
ஒடும்;நின் தாளே
கதியெனக் கொள்வாரைக்
கண்டு

விண்ணகம் பாடும்
வியப்பிலா உன்புகழை
எண்ணுக்குள் சொல்ல
எழுத்தறியேன் – பண்ணுக்குள்
சந்தமிடும் செந்தமிழின்
சீரறியேன் இங்குநான்
சொந்தமுடன் சூட்டும்
தமிழ்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

CENTRE FOR SHAIVA STUDIES Pondicherry

தண்ணளி மலர்கள் ஈரத்
தோய்வொடு சுகந்தம் வீசும்
பண்ணளி காற்றில் ஏறி
பூந்துகள் புதுமை செய்யும்
மண்ணிது சோலை யன்றோ
மங்கிடும் மேகம் தங்கும்
விண்ணகம் அருவி யாகி
விழுந்துளி கவிதை பாடும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

விண்ணவர் வேண்டி நிற்க
விந்தையின் மூல மாகி
எண்குணத் திறைவன் நெற்றி
எரிசுடர்ப் பிழம்பாய்த் தோன்றிச்
சண்முக வடிவ மாகி
சரவணப் பொய்கை வந்து
மண்ணக உயிர்கள் யாவும்
வணங்கிடும் கந்தன் ஆனாய்

கந்தனை ஈன்ற கண்ணும்
காமனை எரித்த கண்ணே
ஐந்தொடு ஒன்று சேர்த்த
அரனவன் நெற்றிக் கண்ணே
மந்திரச் சரணம் சொல்லி
மாமலை தேவர் போற்ற
இந்திர அரச ளித்தாய்
இன்முக மலர்ச்சி ரிப்பால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

பிரணவப் பொருளைக் கேட்டுப்
பிரமனைச் சிறையில் வைத்தாய்
பிரணவப் பொருளைக் கேட்ட
பிதாவின் குருவாய் ஆனாய்
பிரணவப் பொருளே நீதான்
புதியதோர் உலகு கண்டாய்
பிறநவ சக்தி போற்றும்
படைக்கலன் ஏற்றுக் கொண்டாய்

கருவுளே தேன்று ளிர்த்து
கண்ணிலே பனிவ டிக்கும்
அரும்பவிழ் மலர்கள் பூக்கும்
அருமறைப் பாதம் காண
திருமுறைச் சரணம் சொல்லி
தவமுறை பழநி வாழும்
மருவிலா மேனி வீழ்ந்து
மண்படா முக்தி யெய்தும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

கருவிழி உறக்கம் இன்றிக்
கசிந்தது கண்ணீர் மெல்லப்
பெருகிய துயரம் என்பால்
பித்தனாய் ஆக்கும் உன்பால்
ஒருமுறை உன்னைப் பார்த்து
உளத்துயர் சொல்லிப் போக
அருளமர் பழநி வந்தேன்
அரவணைத் தருள்வாய் தேவா

பணியென விதித்தாய் போலும்
பொற்பதம் பணிந்தேன் கண்ணின்
அணிகலன் அன்பே யாகும்
அவலமாம் வினைஅ முத்த
அணிமுடி அணிந்தோர் எல்லாம்
அடங்கினர் மண்ணுக் குள்ளே
மணிமுடி துறந்த ஆண்டி
மாமலை அரசன் ஆனாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

நலம்திகழ் சரியை ஆதி
நால்திற மார்க்கம் யோகம்
பலந்திகழ் கிரியை செய்து
பக்தியிற் முக்தி ஞானம்
வலந்திகழ் பானு நாடி
வாசியுங் கற்றே னில்லை
தலம்திகழ் குன்றம் சார்ந்து
தாளினைப் பிடித்தேன் ஐயா

முக்தியை மூடி வைத்த
மும்மலம் நீக்க வேண்டி
எத்திற வழிக ளென்ன
ஏங்கியே அலைந்து தேடி
சத்தியம் காத்த செந்தில்
செந்தூர்ப் பதிய டைந்தே
பக்தியால் கடைய லானேன்
பாற்கடல் நெஞ்ச கத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

சந்திர ஒளிந னைக்கும்
சண்பகப் பூவ னத்தில்
சந்தனம் அகில்ம ணக்கும்
சித்திர மனையில் வைகும்
இந்திர போகம் வேண்டும்
இனியொரு பிறப்பு வேண்டாம்
அந்தியும் சந்தி யற்ற
அமைதியே வேண்டு மய்யா

பற்றிய உறவு நெஞ்சம்
பற்றிடும் பொருளுக் காக
பற்றினில் வரவு வைக்க
பற்றுடன் பழநி வந்தேன்
பற்றிய நெஞ்ச கத்தில்
பற்றிடும் பக்தி யாகப்
பற்றால் வந்த பற்றே
பற்றினுக் கினிய பற்றே

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

பற்றினால் பற்று வைத்துப்
பற்றினேன் ஏழ்பி றப்பை
பற்றிய வினைய றுக்கப்
பற்றினேன் பாதம் பற்றிப்
பற்றினுள் விழுந்த தேகம்
பற்றிய இந்தப் பற்றால்
பற்றெலாம் இற்றுப் போகப்
பற்றறச் செய்யும் பற்றே

தாருகா வனத்தை யன்று
தழல்படு மெழுகாய்ச் செய்த
காருகா சிவனே உன்னை
காசினிக் குணர்த்தி விட்டான்
சாறுகா கனியா யென்னை
சாற்றிட வைவே லய்யா
நாரிடும் முடிச்சில் நானோர்
நறுமலர் ஆவ தென்றோ

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

தானவர் தலைவா உன்தன்
தாளினைப் பிடித்துக் கெஞ்சி
நான்எது கேட்ட போதும்
நான்விட வேண்டு மென்றாய்
தானெனும் செருக்கை மாய்த்த
தண்குளிர் சோலை வந்தேன்
தானெனும் அகந்தை கொண்ட
தன்வினை உருகும் நெய்யாய்

எவ்வுயிர் அழைத்த போதும்
எழுந்ததன் துயர்து டைப்பாய்
இவ்வுயிர் உன்னில் ஒன்றே
இப்புவி துயர்சு மக்கும்
கவ்விய வினைய றுக்க
கடைக்கண் மெலத்தி ருப்பு
வவ்விய நெஞ்ச மோடு
வளமார் சோலை வந்தேன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

தீதறு தவத்தி லுற்ற
திகழ்புகழ் பாம்பன் சாமி
பேதமில் அருணை ஞானி
பூசனை செய்த வத்தோர்
கோதிலா மறைநூல் செய்யக்
குறைவற அருளே செய்தாய்
தாதவிழ் மலர்போல் என்னைத்
தாளினில் கிடக்க வைப்பாய்

கூத்திடும் கோலம் நீதான்
குரைகடல் துயிலும் நீதான்
மூத்திடா மலைய மர்ந்து
முகிழ்த்திடும் சிரிப்பை ஈந்து
காத்திடும் கருணை வேலும்
கரமலர் பன்னி ரண்டும்
ஏற்றிடும் பிறவி தன்னை
ஏதமில் இசையாய் ஆக்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

ஒருவிரல் தாங்கி நின்றே
ஒருமலை குடை பிடிப்பாய்
ஒருமுழம் துணியைக் கொண்டே
ஒருநதி நீளம் செய்தாய்
ஒருசிறு கீரை கொண்டே
ஒருமுனி பசித விர்த்தாய்
ஒருபிடி அவலை உண்டே
ஒருகனம் நிதிய ளித்தாய்

ஆக்கலில் பிரமன் ஆவாய்
அழிப்பதில் சிவனே ஆவாய்
காத்தலில் மாலே யென்று
கந்தனே கைகு வித்தேன்
நாத்தழும் பேறி நாளும்
நாமமே சொல்லும் என்னை
யாத்திடும் இசையே யாக்கு
யாப்பிலா கவிதை சொன்னேன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

(வேறு)

தைப்பூச நாளதனில் கூட்டம் – பழநித்
தெண்டபாணி அருளின்மீது நாட்டம் – தினம்
மெய்பூசும் அடியார்கள்
மனமுருகிச் சொல்லும்
சரணம் – ஏது – சிரமம்

கூடிவரும் கூட்டமெல்லாம் பாடும் – பழநிக்
குன்றமர்ந்த வேலனையே நாடும் – ஆடிப்
பாடிவரும் பைந்தமிழில்
பட்டதுயர் அத்தனையும்
தீரும் – இன்பம் – சேரும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

கல்லான நெஞ்சமும் கரையும் – பழநிக்
கந்தனையே நினைந்து உருகும் – மூடி
மெல்லக் கண்திறந்தால்
வெள்ளமெனக் கண்ணீர்
பெருகும் – அருள் – பருகும்

சிந்துகவி முந்துதமிழ் பாட்டு – அதன்
சந்தத்தை சிந்தையிலே கேட்டு – மிக
முந்திவந்து அருள்கொடுக்கும்
முருகனை உன்மனதில்
பூட்டு – துயரை – ஓட்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

With Best Compliments
From

DWARAKAMAI CHARITABLE TRUST

Regd:29/2015

SRI SAI NILAYAM

Madurai

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation

தெளிவு சாயி திருமேனி காண்டல்
தெளிவு சாயி திருநாமம் செப்பல்
தெளிவு சாயி திருவார்த்தை கேட்டல்
தெளிவு சாயி வுருசிந்தித்தல் தானே

DWARAKAMAI CHARITABLE TRUST

Center for Shaiva Studies, Pondicherry Collection